முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.

நாள். 11.02.2026.

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.

அசல் வழக்கு எண். 6/2025

2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11ம் நாள் புதன்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மணி | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| த/பெ | : | நாராயணசாமி | வயது | : | 64 |
| ஊர் | : | ஆக்கூர் | தொழில் | : | விவசாயம் |

**வா.சா. 1 ( மணி): வாதி தரப்பில் முதல் சாட்சியின் முதல் விசாரணை தொடர்ச்சி:**

நான் இவ்வழக்கில் 4ம் வாதியாவேன். வாதி தரப்பு முதல் சாட்சியாவேன். நான் ஏற்கனவே என் பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன்.

**கீழ்க்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.**

1. 30.07.1980 தேதியிட்ட தாவா சொத்துக்கள் குறித்து 4ம் வாதியின் தந்தை நாராயணசாமி 1ம் பிரதிவாதியின் தந்தை லட்சுமண நாய்க்கர் என்பவர் பெயருக்கு எழுதிக்கொடுத்த அடமான கடன் பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ. 1**ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 02.06.1988 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட 4ம் வாதியின் தந்தை நாராயணசாமி கவுண்டர் 2 முதல் 4 வாதிகளின் பெயரில் எழுதி வைத்துள்ள பதிவு செய்யப்பட்ட உயில் சாசன ஆவணம் அசல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 09.02.2026 அன்று வழங்கப்பட்ட 4ம் வாதியின் தந்தை நாராயணசாமி என்பவரின் இறப்புச் சான்றிதழின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 31.03.2004 தேதியிட்ட வாதிகள் ஏற்படுத்திக்கொண்ட பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை ஆவணம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 21.11.2024 அன்று வழங்கப்பட்ட பட்டா எண்.2641க்கான கூட்டு பட்டா இணையம் மூலம் பெறப்பட்ட சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. 21.11.2024 அன்று வழங்கப்பட்ட கோவிந்தராஜ் மகன் தனசேகர் பெயரிலுள்ள பட்டா எண்.1100க்கான இணையம் மூலம் பெறப்பட்ட சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. 18.11.2024 தேதியிட்ட நாராயணசாமி மகன் மணி பெயரிலுள்ள பட்டா எண் 1053க்கான இணையம் மூலம் பெறப்பட்ட சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**(வா.சா.ஆ.1 முதல் 7 வரையுள்ள ஆவணங்கள்ள கற்றறிந்த எதிர்தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபணையின்றி குறியீடு செய்யப்படுகிறது)**

**(கற்றறிந்த எதிர்தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

K NALEENI

Digitally signed by K NALEENI
Date: 2026.02.11 16:42:35 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

செய்யாறு